
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 249 | 4 Pages | 7.4.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 249 | 4 பக்கங்கள் | 7.4.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்**
**செம்பொருள் காண்ப தறிவு**

**விளக்கம்:**
பிறவித்துன்பத்திற்குகாரணமானஅறியாமைநீங்குமாறு முக்தி எனும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.

# நீலகிரி மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகள் வெளியிட்டார் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

நீலகிரி, ஏப்.7

ஊட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்கலந்துகொண்டுநீலகிரி மாவட்டத்திற்கு 6 புதிய அறிவிப்புகள் வெளியிட்டார். அதன் விபரம் பின்வருமாறு;

★ நீலகிரியில் சொந்தமாக வீடு இல்லாத ஏழை, எளிய மக்களுக்காக கூடலூரில் ரூ.26.06 கோடி செலவில் 300 வீடுகள் கொண்ட புதிய கலைஞர் நகர் அமைக்கப்படும்.

★ பழங்குடியின மக்களின் வாழ்வியலை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையிலும், அதுகுறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளும் வகையிலும் ரூ.10 கோடி மதிப்பில் பழங்குடியினர் அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.



★ 'எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்' எனும் சுற்றுலா முறை, ரூ.5 கோடி செலவில் 10புதியபேருந்துகளுடன்தொடங்கப்படும்

★ ஊட்டியில் சுற்றுலா காலங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க ரூ.20 கோடி செலவில் MultiLevel கார் பார்க்கிங் வசதி அமைக்கப்படும்

★ நடுகாணி மரபணு தொகுதி சூழலியல் இயற்கை சுற்றுலா மையம் ரூ.3 கோடி செலவில் மேம்படுத்தப்படும்

★ பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் ரூ.5.75 கோடி செலவில் 23 சமுதாய கூடங்களும், நகர்ப்புற பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு ரூ.10 கோடி செலவில் 200 வீடுகளும் கட்டித் தரப்படும்.

## புதிய ரெயில்வே திட்டங்கள் இணைப்புக்கான உட்கட்டமைப்பை மேம்படுத்தும்: பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, ஏப்7

நாட்டில் தற்போது, இந்திய ரெயில்வே துறையின் பயன்பாட்டில் உள்ள ரெயில்வே தண்டவாள பணிகளுடன் கூடுதலாக 1,247 கிலோ மீட்டர் தொலைவிலான ரெயில்வே தண்டவாள பணிகள் விரிவுப்படுத்தப்பட உள்ளன. இதற்காக ரூ.18,658 கோடி மதிப்பிலான 4 திட்டங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. மத்திய ரெயில்வே அமைச்சகத்தின் இந்த திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.

இதனால், மராட்டியம், ஒடிசா மற்றும் சத்தீஷ்கார் ஆகிய 3 மாநிலங்களில் உள்ள 15 மாவட்டங்கள் ரெயில்வே தண்டவாள இணைப்பை பெற்று பயன்பெறும்.

இதுபற்றி பிரதமர் மோடி இன்று குறிப்பிடும்போது, பன்முக தன்மை கொண்ட இந்த 4 ரெயில்வே திட்டங்களுக்கு என்னுடைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால், இணைப்புக்கான உட்கட்டமைப்பு மேம்படும், சவுகரியம் ஏற்படும், தளவாடங்களுக்கான செலவினங்கள் குறையும் மற்றும் விநியோக சங்கிலிக்கான விசயங்கள் வலுப்படும் என்றார்.

## ஓட்டல் கட்டுமான பணியின்போது மேற்கூரை இடிந்து விபத்து 2 பேர் பலி



லக்னோ, ஏப்.7

உத்தரபிரதேச மாநிலம் ஆக்ராவின் விகாஸ் நகர் பகுதியில் ஓட்டல் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இன்று கட்டுமான பணியில் வழக்கம்போல் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், கட்டுமான பணியின்போது இன்று திடீரென ஓட்டல் மேற்கூரைஇடிந்துவிழுந்தது. மேலும்,அருகில்இருந்தகட்டிடங்களும் இடிந்தன.இந்தசம்பவத்தில்10க்கும்மேற்பட்டோர்இடிபாடுகளுக்குள் சிக்கினர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் 2 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 7 பேர் இடிபாடுகளுக்கு சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

## கர்நாடகா: மனைவி கொலைக்காக சிறையில் கணவன்... வேறொரு நபருடன் வாழும் மனைவி

மைசூரு, ஏப்.7

கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில் குஷால்நகர் பகுதியில் வசித்து வருபவர் சுரேஷ் (வயது 38). இவருடைய மனைவி மல்லிகே என்பவர் கடந்த 2020ம் ஆண்டு டிசம்பரில் காணாமல் போனார். இதுபற்றி போலீசுக்கு சென்று அவர் புகார் அளித்து உள்ளார். ஆனால், பெரியபாட்னா தாலுகாவுக்கு உட்பட்ட பகுதியில் பெண்ணின் எலும்புக்கூடு ஒன்றை போலீசார் கண்டெடுத்தனர். அது மல்லிகேவுடையது என்றும் சுரேஷ் மனைவியை படுகொலை செய்து விட்டார் என்றும் கோர்ட்டில் போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். இதனால் சுரேஷ் சிறையில் அடைக்கப்பட்டார். ஒன்றரை ஆண்டுகளாக அவர் கைதியாக இருந்துள்ளார். இந்நிலையில், கடந்த 1ந்தேதி வேறொரு நபருடன் ஓட்டலில் மல்லிகே சாப்பிட்டபடி இருந்துள்ளார். அவரை சுரேஷின் நண்பர் பார்த்து அதிர்ச்சி அடைந்து இருக்கிறார். இந்த விவகாரம் செசன்ஸ் கோர்ட்டுக்கு கொண்டு செல்லப்பட்டது. மல்லிகேவும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவருடைய மரபணு பரிசோதனை அறிக்கை வருவதற்கு முன்பே போலீசார் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளனர். அந்த அறிக்கையில், ரத்த மாதிரிகள் ஒத்து போகவில்லை என்றே முடிவுகள் இருந்தன. இந்நிலையில், வேறொரு நபருடன் ஓடிப்போய் அவரையே திருமணம் செய்து கொண்டேன் என மல்லிகே கோர்ட்டில் ஒத்து கொண்டார். சுரேசுக்கு என்ன ஆனது என்பது தனக்கு எதுவும் தெரியவில்லைஎன்றும்ஷெட்டி ஹள்ளிகிராமத்தில்வசித்துவருகிறேன் என்றும் கூறியுள்ளார். அவரை போலீசார் தேடி கண்டறியும் பணியில் ஈடுபடவில்லை. இதனை கோர்ட்டு தீவிர கவனத்தில் கொண்டது. இதனால், அந்த எலும்புக்கூடு யாருடையது என்றும் பொய்யான குற்றப்பத்திரிகையை ஏன் போலீசார் தாக்கல் செய்தனர் என்ற கேள்வியும் எழுந்துள்ளது என சுரேஷின் வழக்கறிஞர் கூறினார்.

இதுபற்றி மனித உரிமைகள் ஆணையத்திற்கு செல்வோம் என அவர் கூறியுள்ளார். சுரேசை குற்றவாளியாக்கி 2 வழக்குகளையும் முடிக்க போலீசார் சதி திட்டம் தீட்டினரா? என்பது பற்றி விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். இதனை தீவிர கவனத்தில் கொண்ட கோர்ட்டு, முழு அறிக்கையை வருகிற 17ந்தேதிக்குள் தாக்கல் செய்யும்படி எஸ்.பி.க்கு உத்தரவிட்டார்.

## வித்யாகிரி கலை அறிவியல் கல்லூரியின் 2ம் பட்டமளிப்பு விழா

வித்தியாகிரி கலை அறிவியல் கல்லூரி இரண்டாம் பட்டமளிப்பு விழா புதுவயல் வித்யா கிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின்இரண்டாம் பட்டமளிப்பு விழா அழகப்பாபல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழா அரங்கி சிறப்பாக நடைபெற்றது இந்த விழாவிற்கு அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்த ரவி மற்றும் தவத்திற்கு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டம் வழங்கி பட்டமளிப்பு விழா நிகழ்த்தினார்தவத்திரு பொன்னம்பல அடிகளார்தனது உரையில்கல்விதான் மனிதனுக்கு உயிரைத் தரும் மாணவர்கள் கல்வியைகசடற கற்றுகற்ற அறிவினை பயன்படுத்தி வாழ்வில் உயர வேண்டும் என்றுஎன்று தாமஸ் ஆல்வா எடிசன்மற்றும் கணியன்பூங்குன்றம் போல் அறிவாகும் ஆற்றலாகும் மாணவர் செயல்பட வேண்டும் என கூறினார்இந்த விழாவில் 420 பேர் பல்வேறு பாடப்பிரிவுகளில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்கள் பெற்றனர் இதில் அஞ்சு பேர் பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்றவர்கள் 28 பேர் கல்லூரி அளவில் ரேங்க் பெற்றவர்கள் .வித்தியகிரி கல்வி நிறுவனங்களில் தாளாளர் மற்றும் கல்லூரி முதல்வர் டாக்டர் சுவாமிநாதன் ஆண்ட அறிக்கையை வசித்தார் வித்தியாகரி கல்வி நிலையங்களில் தலைவர் கிருஷ்ணன் மற்றும் பொருளாளர் ஆட்சி முகமது மீரா ஆகியோர் முன்னிலை வைத்தார் மற்றும்







காரைக்குடி வித்தியாகரி பள்ளி முதல்வர் ஹேமா மாலினி சுவாமிநாதன் புதுவயல் பள்ளி முதல்வர் குமார் மற்றும் காரைக்குடி முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர் நாட்டுப் பன்னுடன் விழா இனிதே நிறைவு அடைந்தது

## தனியார் பனியன் நிறுவனத்தில் தீ



திருப்பூர் பெருமாந ல்லூரை அடுத்த அய்யம்பாளையத்தில், சுரேஷ் மற்றும் ஸ்ரீதர் ஆகியோருக்கு சொந்தமான 35,000 சதுர அடியில் பனியன் நிறுவனம் உள்ளது. இதில் பேப்ரிக், பேக்கிங், ஸ்டிச்சிங் என பல்வேறு பிரிவுகளில் ஏராளமான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், இன்று அதிகாலை பனியன் நிறுவனத்திலிருந்து புகை வருவதை பார்த்து பனியன் நிறுவன காவலாளி அதிர்ச்சி அடைந்தார்.

பின்னர் உரிமையாளர்கள் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளித்தார். சம்பவ இடத்திற்கு 3 வாகனங்களில் விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் 2 மணி நேரத்திற்கு மேலாக போராடி தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் பின்னலாடை எந்திரங்கள் மற்றும் துணிகள் என பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் தீயில் நாசமானது. மின் கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டதா?

அல்லது வேறு ஏதாவது காரணமா? என பெருமாநல்லூர் காவலர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.இது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தென்காசி அருள்மிகு ஸ்ரீ காசி விஸ்வநாதர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனை கூட்டம்

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தென்காசி அருள்மிகு ஸ்ரீகாசி விஸ்வநாதர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக பல்வேறு துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தென்காசி அருள்மிகு ஸ்ரீ காசி விஸ்வநாதர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக பல்வேறு துறை அலுவலர்ளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் திரு ஏ.கே.கமல்கிஷோர். தலைமையில் நடைபெற்றது.



பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததா வது,

தென்காசி அருள்மிகு ஸ்ரீ காசிவிஸ்வநாதர் திருக்கோவிலில் இன்று (07.04.2025) அன்று காலை 09.00 மணிக்கு மேல் 10.00 மணிக்குள் மகா கும்பாபிஷேக நடைபெற உள்ளது. மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இடங்களான இராஜகோபுரம், சுவாமி சன்னதி, அம்பாள் சன்னதி ஆகிய இடங்களில் உபயதாரர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் நின்று பார்வையிடுவதற்கு ஏதுவாகவும், பாதுகாப்பு கருதியும், கம்புகளை அமைத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில் வளாகத்திற்குள் பக்தர்கள் வரிசையாக சென்று சுவாமி தரிசனம் செய்து திருக்கோயில் வளாகத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஏதுவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில் வளாகத்திற்குள் பக்தர்களுக்கு குடிதண்ணீர் வசதிகள் தேவையான இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில் சுற்றியுள்ள ரதவீதிகளிலும், திருக்கோயில் வளாகத்திற்குள்ளும் நின்று கும்பாபிஷேகத்தை காணும் பக்தர்களுக்கு டிரோன் மூலம் தீர்த்தம் தெளிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. LED திரை மூலம் கும்பாபிஷேகத்தை பக்தர்கள் கண்டு களிப்பதற்கு ஏதுவாக இத்திருக்கோயில் மற்றும் ரதவீதியில் டிரோன் கேமராக்கள் கொண்டு படப்படிப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்தன்று பக்தர்கள் நலன் கருதி அவசர கால உபகரணங்களுடன் மருத்துவ குழுவினர் தயார் நிலையில் இருக்குமாறும், அவசர ஊர்தி தயார் நிலையில் இருக்குமாறும் சுகாதாரத்துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்திற்கு வரும் பக்தர்கள் நலன் கருதி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளுக்கான சிறப்பு உபகரணங்களுடன் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. கும்பாபிஷேகம் நடக்க இருப்பதால் தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், திருக்கோயில் அமைந்துள்ள பகுதி மற்றும் முக்கிய நகர் பகுதிகளுக்குள் சேதமடைந்த மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள மின் கம்பங்கள் இருப்பின் அதனை சரி செய்து தர மின்சார துறையுடன் இணைந்து சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. செங்கோட்டை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் இருந்து வரும் பக்தர்கள் தங்களின் வாகனங்களை நடுபல்க் அருகே அமைந்துள்ள தென்காசி கால்நடை மருத்துவமனை அருகே அமைக்கப்பட்டுள்ள வாகனம் நிறுத்தத்திலும், தென்காசி புதிய பேருந்து நிலையம் வழியாக வாகனத்தில் வரும் பக்தர்கள் தங்களின் வாகனத்தை பழைய பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டுள்ள வாகன நிறுத்தத்தில் நிறுத்திவிட்டு நடந்து செல்ல வேண்டும். திருநெல்வேலி மற்றும் அம்பாசமுத்திரம் சாலை வழியாக கேரளா மாநிலம் செல்ல ஆசாத் நகர் மத்தளம்பாறை பழைய குற்றாலம் குற்றாலம் செங்கோட்டை வழியாக கேரளா மாநிலத்திற்கும், செங்கோட்டையில் இருந்து திருநெல்வேலி செல்லக்கூடிய கனரக வாகனங்கள் பண்பொழி கணக்கப்பிள்ளை வலசை இலத்தூர் ஆய்க்குடி சுரண்டை அத்தியூத்து வழியாக திருநெல்வேலிக்கும், செங்கோட்டையிலிருந்து அம்பாசமுத்திரம் மார்க்கமாக செல்லக்கூடிய கனரக வாகனங்கள் பிரானூர் பார்டர் குற்றாலம் பழைய குற்றாலம் மத்தளம்பாறை வழியாக அம்பாசமுத்திரத்திற்கும், மதுரையில் இருந்து தென்காசி வழியாக திருநெல்வேலி செல்லும் கனரக வாகனங்கள் இலத்தூர் விலக்கு ஆய்க்குடி சுரண்டை அத்தியூத்து வழியாக திருநெல்வேலிக்கு செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. திருநெல்வேலி, பாபநாசம் உள்ளிட்ட வெளியூர்களிலிருந்து கும்பாபிஷேகத்தினை காண வரும் பக்தர்களுக்கு போக்குவரத்துத்துறை மூலம் 31 சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு: 9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

தினகனி



# காவல் நிலைய விசாரணையில் தொழிலாளி அடித்துக்கொலை: ஸ்ரீவைகுண்டம் டிஎஸ்பி உள்பட 9 போலீசாருக்கு ஆயுள் தண்டனை: 25 ஆண்டுகளுக்கு பின் தூத்துக்குடி நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

தூத்துக்குடி, ஏப்.7

தூத்துக்குடியில் காவல் நிலைய விசாரணையில் தொழிலாளி அடித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில் ஸ்ரீவைகுண்டம் டிஎஸ்பி, இன்ஸ்பெக்டர் உள்பட 9 போலீசாருக்கு ஆயுள் தண்டனை விதித்து தூத்துக்குடி நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு அளித்தது. தூத்துக்குடி அலங்காரத் தட்டை சேர்ந்தவர் வின்சென்ட். உப்பளத் தொழிலாளியான இவர், 1999ல் தூத்துக்குடி ரூரல் பஞ்சாயத்து உறுப்பினராகவும், அலங்காரத்தட்டு ஊர்த் தலைவராகவும் இருந்து வந்தார்.



இவருக்கு கிருஷ்ணம்மாள் என்ற மனைவியும், 5 மகன்களும் உள்ளனர். கடந்த 17 91999 அன்று இரவு இங்குள்ள விநாயகர் கோயில் திருவிழாவிற்கு வின்சென்ட், அவரது நண்பரான முத்து என்பவருடன் சென்றுள்ளார். இருவரும் வீடுதிரும்பவில்லை. இதனிடையே கணவரான வின்சென்டை தாளமுத்துநகர் போலீசார் அழைத்துச் சென்றதாக கிடைத்த தகவலையடுத்து கிருஷ்ணம்மாள் அங்கு சென்றபோது கணவரை பார்க்க அனுமதிக்கவில்லை. 1891999 அன்று இரவு வின்சென்டை தாளமுத்துநகர் காவல் நிலைய போலீசார் தாக்கியதில் இறந்துவிட்டதாக கிருஷ்ணம்மாளுக்கு தகவல் கிடைத்தது.

அவரது புகாரின்பேரில் ஆர்டிஓ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இதில் வின்சென்ட், முத்து மற்றும் இதே பகுதியை சேர்ந்த மரியதாஸ் ஆகிய 3 பேரையும் வெடி பொருட்கள் வைத்திருந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு அப்போதைய தாளமுத்துநகர் இன்ஸ்பெக்டர் சோமசுந்தரம் தலைமையிலான போலீசார் அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு பணியில் இருந்த போலீசார், 3 பேரையும் சரமாரியாக அடித்து உதைத்துள்ளனர். இதில் வின்சென்ட் காவல் நிலையத்திலேயே இறந்தது தெரிய வந்தது.

இதையடுத்து அப்போதைய இன்ஸ்பெக்டர் சோமசுந்தரம் மற்றும் போலீசார் ஜெயசேகரன், ஜோசப்ராஜ், பிச்சையா, செல்லத்துரை, வீரபாகு, சிவசுப்பிரமணியன், சுப்பையா, ரத்தினசாமி, பாலசுப்பிரமணி, எஸ்ஐ ராமகிருஷ்ணன் ஆகிய 11 பேர் மீது அடைத்து வைத்து தாக்குதல், கொலை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட நீதிமன்றங்களில் நடந்து வந்தது.

கடந்த 2024 ஜூலை மாதம் தூத்துக்குடி 1வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்துக்கு இவ்வழக்கு மாற்றப்பட்டு விசாரணை நடந்தது. வழக்கை நீதிபதி தாண்டவன் விசாரித்து, கடந்த மார்ச் 20ம் தேதியன்று 'ஏப்ரல் 5ம் தேதி (நேற்று) தீர்ப்பு வழங்கப்படும்' என அறிவித்தார். இதைத் தொடர்ந்து குற்றம்சாட்டப்பட்ட 11 பேரும் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். இதில் சம்பந்தப்பட்ட போலீசார் பலர் ஓய்வுபெற்றுவிட்டனர்.

இவ்வழக்கில் இன்ஸ்பெக்டர் சோமசுந்தரம், முன்னாள் எஸ்ஐ ஜெயசேகரன், முன்னாள் எஸ்எஸ்ஐ ஜோசப்ராஜ், எஸ்எஸ்ஐ பிச்சையா, முன்னாள் எஸ்எஸ்ஐ வீரபாகு, முன்னாள் ஏட்டுகள் செல்லத்துரை, சுப்பையா, பாலசுப்பிரமணி, அப்போதைய எஸ்ஐயும், தற்போதைய ஸ்ரீவைகுண்டம் டிஎஸ்பியுமான ராமகிருஷ்ணன் ஆகிய 9 பேருக்கு ஆயுள் தண்டனையும், தலா ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி தாண்டவன் தீர்ப்பு கூறினார். எஸ்எஸ்ஐ சிவசுப்பிரமணியன், ஏட்டு ரத்தினசாமி ஆகியோரை விடுதலை செய்தார். தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும் நேற்றிரவே பலத்த பாதுகாப்புடன் பாளை. மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். 25 ஆண்டுகளுக்கு பின்னர் வழங்கப்பட்ட இந்த ஆயுள் தண்டனை தீர்ப்பு தூத்துக்குடி மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மார்க்சிஸ்ட் மாநாடு இன்றுடன் நிறைவு பொதுச்செயலாளர் இன்று தேர்வு: மாலையில் பிரமாண்ட பேரணி

மதுரை, ஏப்.7

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாடு இன்று முடிகிறது. புதிய பொதுச்செயலாளர் தேர்வும் நடக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்24வதுஅகிலஇந்திய மாநாடு மதுரை கடந்த 2ம் தேதி முதல் நடந்து வருகிறது.




கடந்த 3ம் தேதி கூட்டாட்சி கோட்பாடே இந்தியாவின் வலிமை என்ற தலைப்பில்நடந்தமாநில உரிமைக்கான பாதுகாப்பு கருத்தரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், கர்நாடகா உயர்கல்வித்துறை அமைச்சர் சுதாகர் உள்ளிட்டோர் பேசினர்.

மாநாட்டின் கடைசி நாளான இன்று கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர்கள், பொலிட் பீரோ உறுப்பினர்கள் மற்றும் புதிய பொதுச் செயலாளர்உள்ளிட்டநிர்வாகிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். மாநாட்டின் நிறைவாக மாலை 3 மணிக்கு பாண்டி கோயில் ரிங் ரோட்டில் இருந்து கம்யூனிஸ்ட் கட்சியினர் பங்கேற்கும் பேரணி நடக்கிறது. ரிங் ரோட்டில் மஸ்தான்பட்டி அருகே பேரணி முடிவில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

# பொள்ளாச்சி பாலியல் வழக்கு: குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்: அரசு தரப்பு சாட்சி விசாரணை நிறைவு

கோவை, ஏப்.7

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்கள் விசாரணை நிறைவுபெற்றது. இதில் குற்றம்சாட்டப்பட்ட 9 பேரும் நேற்று கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் 8க்கும் மேற்பட்ட இளம்பெண்களை வீடியோ எடுத்து, பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. இதில் பாதிக்கப்பட்ட இளம்பெண்கள் புகார் அளித்ததின்பேரில், பொள்ளாச்சி போலீசார் முதலில் விசாரித்த நிலையில், இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு, பின்னர் சிபிஐக்கு மாற்றம் செய்யப்பட்டது.



இக்குற்றச்செயல் தொடர்பாக, பொள்ளாச்சியை சேர்ந்த திருநாவுக்கரசு (25), சபரிராஜன் (25), வசந்தகுமார் (27), சதீஷ் (28), மணிவண்ணன் (25) ஆகிய 5 பேர் கடந்த 2019ம் ஆண்டும், ஹேரேன்பால் (29), பாபு என்கிற பைக் பாபு (34), அருளானந்தம் (34), அருண்குமார் ஆகிய 4 பேர் கடந்த 2021ம் ஆண்டும் கைது செய்யப்பட்டனர். கைதான 9 பேரும் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை கோவை சிபிஐ நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இவ்வழக்கில், 50க்கும் மேற்பட்ட அரசுத்தரப்பு சாட்சியங்கள், சுமார் 200 ஆவணங்கள், 40 மின்னணு தரவுகள் உள்பட பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து பொருட்களும் விசாரணைக்கு சேர்க்கப்பட்டு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த வழக்கில், பாதிக்கப்பட்டவர்கள் 8 பேர் விசாரணையின்போது, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளனர்.

இவ்வழக்கில், ஒவ்வொரு வாய்தாவின்போதும், குற்றம்சாட்டப்பட்ட 9 பேரும் சேலம் சிறையில் இருந்தபடியே வீடியோ கான்பரன்சின் மூலம் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். தற்போது இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியங்கள் விசாரணை நிறைவு பெற்றுள்ளது. இதையடுத்து, கைதான 9 பேரிடம், சட்ட விதிகள் 313ன் கீழ் கேள்விகள் கேட்பதற்கு கோர்ட்டில் ஆஜர்படுத்தும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

அதன்படி, திருநாவுக்கரசு உள்பட 9 பேரும் நேற்று சேலத்தில் இருந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு, கோவை சிபிஐ நீதிமன்றத்தில், நீதிபதி ஆர்.நந்தினி தேவி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நேற்று காலை முதல் மாலை 4.30 மணி வரை வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்தது. பின்னர் விசாரணையை வருகிற 9ம் தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதி உத்தரவிட்டார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி Dr.வள்ளல் அழகப்பர் அவர்களின்116வதுபிறந்ததினம்அவர்களின்தியாகங்களை நினைவுகூர்ந்துமலர்தூவிமரியாதைசெலுத்தியகாரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் சா.மாங்குடி அவர்கள் மற்றும் காரைக்குடிமாநகரகாங்கிரஸ்தலைவர்பாண்டிமெய்யப்பன் அவர்கள் காரைக்குடி மாநகர வர்த்தக காங்கிரஸ் தலைவர் ஜெயபிரகாஷ் அவர்கள் காரைக்குடி சட்டமன்ற அலுவலக மேலாளர்கள் அருணா மற்றும் பாலா அவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

# கல்லல் அருகே தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கிய டிஎஸ்பி

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே பெரிச்சி கோயில் கிராமத்தில் உள்ள கல்லல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 10வது ஆண்டு விழா பிரம்மாண்டமாக நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் தலைமை வைத்தார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வைரமணி விழா ஏற்பாடுகளையும், மாணவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார். இதில் மாணவ மாணவிகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அசத்தினர். இந்த ஆண்டு விழாவிற்கு காவல் துணை கண்காணிப்பாளர் செல்வகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விழிப்புணர்வு உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், இன்றைய அரசு பள்ளிகள் மிகுந்த வளர்ச்சி அடைந்துள்ளன. அன்று நன்றாக படித்ததால் இன்று நான் இந்த உயர்ந்த உத்தியோகத்தில் உள்ளேன். நீங்களும் நன்றாக படித்து வரும் காலங்களில் உயர்ந்த உத்தியோகத்திற்கு வர வேண்டும். பெற்றோர்கள் தங்களது வேலையை விட்டு பள்ளிக்கு வந்து மாணவர்களின் திறமைகளை ரசிக்கின்றனர். அவர்கள் தியாகத்திற்காகவாது மாணவர்கள் முன்னேற வேண்டும் என காவல் துணை கண்காணிப்பாளர் செல்வகுமார் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு உரையாற்றினார். தொடர்ந்து சமூக ஆர்வலர் கண்டரமாணிக்கம் மணிகண்டன் மாணவர்களுக்கு கல்வி குறித்து போதித்தார். இந்த விழாவில் பெற்றோர்கள் கிராம பொதுமக்கள், முக்கியஸ்தர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். விழாவில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா நடத்தப்பட்டது. போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



# சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழர்களையும் தமிழ்நாட்டையும் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழர்களையும் தமிழ் நாட்டையும் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் எஸ். மாங்குடி, சி. ஆர. சுந்தரராஜன், சஞ்சய் காந்தி, இராஜரத்தினம், சாந்தா சகாயராணி, ஶ்ரீவித்யாகணபதி, விஜயகுமார் பங்கேற்பு...



இந்திய ஒன்றிய அரசை ஆளுகின்ற மோடி, அமீத்ஷா தலைமையிலான பாஜக அரசின் தமிழ்நாட்டு மக்கள் விரோதப் போக்கினை கண்டித்தும், தொடர்ந்து மக்கள் விரோதப்போக்கினை கையாளும் விதத்தை கண்டித்தும் சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது...

மாவட்டத்தலைவர் சஞ்சய் காந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் பச்சேரி சி. ஆர்.சுந்தரராஜன், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடி, மாவட்ட மேனாள் தலைவர் இராஜரத்தினம், நகர்காங்கிரஸ் தலைவர் கவுன்சிலர் விஜயகுமார் மாநில மகிளா காங்கிரஸ் ,ஶ்ரீவித்யாகணபதி, மாவட்ட கவுன்சிலர் சாந்தா சகாயராணி, சிறுபான்மை அணி மாவட்டத்தலைவர் மஹாராணி சையது இபுறாஹீம், மாநில எஸ்சி எஸ்டி பிரிவு செயலாளர் மேலமங்கலம் முரளீதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

வட்டாரத்தலைவர்கள், கரும்பாவூர் உடையார், மதியழகன், தொகுதி பொறுப்பாளர்கள் சோனை, இளம் பரிதி கண்ணா., மாவட்ட நிர்வாகிகள் குமரன் மெஸ் சிதம்பரம், சண்முகராஜன், மகளிரணி ஏலம்மாள் ராஜேந்திரன், லெட்சுமணன், துணைத்தலைவர் ஜெயசீலன், கீழக்குளம் ரவி, இளைஞர் காங்கிரஸ் செந்தில் உள்ளிட்ட மாவட்ட, வட்டார, கிராமக்கமிட்டி காங்கிரஸார் ஏராளமானோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்

# இரவு பகல் பாராமல் ராட்சத மோட்டார் மூலம் கிருஷ்ணா கால்வாய் தண்ணீரை உறிஞ்சும் ஆந்திர விவசாயிகள்: நடவடிக்கை எடுக்கப்படுமா?

சென்னை, ஏப்.7

ஊத்துக்கோட்டை அருகே, கிருஷ்ணா கால்வாயில் மோட்டார் மூலம் விவசாயத்திற்கு தண்ணீர் உறிஞ்சும் ஆந்திர விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக ஒவ்வொரு ஆண்டும் தெலுங்கு கங்கா நதிநீர் ஒப்பந்தப்படி 15 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் இதில், 3 டிஎம்சி சேதாரம் போக, ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டிஎம்சியும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டிஎம்சி என 12 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும்.



ஆந்திர அரசின் நீர்வளத்துறை அதிகாரிகள் கடந்தஜனவரிமாதம்திறக்க வேண்டிய தண்ணீரை தமிழகத்திற்கு திறக்காததால், தமிழக அரசின் நீர்வளத்துறை அதிகாரிகள் ஆந்திர பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என கடிதம் எழுதினர், இதனையடுத்து, தமிழக அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த மாதம் 24ம் தேதி வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர், கண்டலேறுவில் திறக்கப்பட்ட தண்ணீர் 152 கி.மீட்டர் கடந்து தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டிற்கு கடந்த மாதம் 28ம் தேதி வந்தடைந்தது.

இந்நிலையில், கண்டலேறு அணையில் கூடுதலாக 300 கன அடி வீதம் 800 கன அடியாகவும், தற்போது, 1320 கன அடியாகவும் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்டிற்கு நேற்று பிற்பகல் 290 கன அடியாக வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில், ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்ட் அருகே ஆந்திர பகுதியான கண்டிகை, ஆம்பாக்கம், சிறுவனம்புதூர், மதனம்பேடு, மதனஞ்சேரி ஆகிய பகுதிகளில் ஆந்திர விவசாயிகள் ராட்சத மோட்டார் மூலம் கிருஷ்ணா கால்வாயில் இருந்து விவசாயத்திற்கு தண்ணீரை இரவு பகல் பாராமல் உறிஞ்சி நாற்று நடவும், பயிர்களுக்கும் பயன்படுத்துகிறார்கள்.

இந்த தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்தகூடாது என அதிகாரிகள் தெரிவித்தும், ஆந்திர விவசாயிகள் இதை கண்டு கொள்ளவில்லை. இதன் காரணமாக ஜீரோ பாயிண்டில் தண்ணீர் குறைந்து வருகிறது. எனவே, ஆந்திர விவசாயிகள் தண்ணீர் உறிஞ்சுவதை தடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆந்திர நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# 43வது அகில இந்திய குதிரையேற்ற போட்டியில் சென்னை பெருநகர காவல் குதிரைப்படைக்கு முதல் பரிசு: போலீஸ் கமிஷனர் அருண் பாராட்டு

சென்னை, ஏப்.7

43வது அகில இந்திய குதிரையேற்ற போட்டியில் சென்னை பெருநகர காவல் குதிரைப்படையினர் முதல் பரிசு பெற்றனர். அவர்களை சென்னை போலீஸ் கமிஷனர் அருண் நேரில் அழைத்து பாராட்டினார். கடந்த மாதம் 10ம் தேதி முதல் 25ம் தேதி வரை அரியானா மாநிலம் இந்திய திபெத் எல்லை பாதுகாப்பு படை அடிப்படை பயிற்சி மையத்தில், 43வது அகில இந்திய காவல் குதிரையேற்ற சாம்பியன்ஷிப் மற்றும் குதிரைப்படை காவல் துறையினருக்கான போட்டிகள் நடந்தது.



இந்த போட்டியில் தமிழக காவல்துறை சார்பாக 1 உதவி காவல் கண்காணிப்பாளர், 1 உதவி காவல் ஆணையர், 9 ஆண் குதிரையேற்ற வீரர்கள் மற்றும் 1 பெண் குதிரையேற்ற வீராங்கனை பங்கேற்றனர். போட்டியில் தமிழக காவல்துறை அணியின் உதவி காவல் கண்காணிப்பாளர் ஷுபம் நாகர்கோஜ், ஆபிசர் ஹேக்ஸ் பிரிவில் வெள்ளி பதக்கமும், உதவி ஆணையர் அஜய் தங்கம் ஆபிசர் ஹேக்ஸ் பிரிவில் வெண்கல பதக்கமும், முதல்நிலை பெண் காவலர் சுகன்யா 1 தங்கப்பதக்கம் மற்றும் 1 வெள்ளி பதக்கம் என 2 பதக்கங்களும், முதல்நிலை காவலர் மணிகண்டன் 4வது இடமும், குதிரை பராமரிப்பாளர் ஆகாஷ் குதிரை பராமரிப்பாளர் தேர்வில் வெள்ளி பதக்கமும் பெற்று தமிழக காவல்துறை மற்றும் சென்னை பெருநகர காவல்துறைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் வேப்பேரி காவல் ஆணையரகத்தில் நடந்த நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண் குதிரையேற்ற போட்டியில் வெற்றி பெற்று பதக்கங்களை வென்ற சென்னை பெருநகர காவல் குதிரைப்படையைச் சேர்ந்த முதல் நிலை பெண் காவலர் சுகன்யா, முதல்நிலை காவலர் மணிகண்டன் மற்றும் குதிரை பராமரிப்பாளர் ஆகாஷ் ஆகியோரை நேரில் அழைத்து வெகுமதி வழங்கி பாராட்டி, போட்டியில் வென்ற குதிரைகளையும் பார்வையிட்டார்.

மேலும், போட்டியில் வென்ற குதிரைகளின் சாகசங்களை கண்டு ரசித்து பாராட்டினார். நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர்கள் கபில்குமார் சி சரட்கர், (தலைமையிடம்), கண்ணன், (தெற்கு), சுதாகர் (போக்குவரத்து), ராதிகா, (மத்திய குற்றப்பிரிவு) காவல் இணை ஆணையர் (கிழக்கு மண்டலம்) விஜயகுமார், துணை ஆணையர்கள் ஜெரினா பேகம், (கீழ்ப்பாக்கம்), கீதாஞ்சலி, (மத்திய குற்றப்பிரிவு2)சுப்புலட்சுமி (நிர்வாகம்), அன்வர்பாஷா, (ஆயுதப்படை2) காவல் அதிகாரிகள் மற்றும் குதிரைப்படையினர் கலந்து கொண்டனர்.

## அரக்கோணம்: ரெயிலில் இருந்து தவறி விழுந்து இளைஞர் உயிரிழப்பு




ராணிப்பேட்டை ஏப்.7

ஆம்பூரை சேர்ந்தவர் பிரேம் (வயது 26) . இவர் தனது உறவினர் வீட்டு நிகழ்ச்சிக்காக ஆம்பூரில் ரெயில் நிலையத்தில் இருந்து கோவை சென்னை இன்டர்சிட்டி ரெயிலில் இன்று காலை தனது உறவினர்களுடன் ஏறினார்.

இந்த ரெயில் இன்று மதியம் அரக்கோணம் ரெயில் நிலையத்திற்கு வந்தடைந்தது. அப்போது பிரேம் மற்றும் அவரது உறவினர்கள் அரக்கோணம் ரெயில் நிலையத்தில் இறங்கினர்.

சற்று தூரம் சென்றபோது உறவினர் ஒருவர் தனது பையை அங்கேயே விட்டு விட்டதாக தெரிவித்தார். அப்போது ரெயில் புறப்பட தொடங்கியது.

தவறவிட்ட பையை எப்படியாவது எடுத்தே ஆக வேண்டும் என முடிவு செய்து செல்லும் ரெயிலில் ஏற முயற்சித்தார். அப்போது எதிர்பாராதவிதமாக நிலைதடுமாறி கீழே விழுந்தார்.

இதனைக்கண்ட பயணிகள் மற்றும் நிலையத்தில் இருந்த அனைவரும் அலற ரெயில் ஓட்டுநர் ரெயிலை நிறுத்தினார்.

இந்த நிலையில் ரெயிலின் அடியில் சென்று பார்க்கும் போது அவர் ரெயிலின் சக்கரத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது தெரியவந்துள்ளது.

இந்த விபத்து காரணமாக, கோவை சென்னை இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரெயில் சுமார் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக தாமதம் ஏற்பட்டது.

## தூத்துக்குடி: தாய், மகள் கொலை வழக்கில் 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது

தூத்துக்குடி ஏப்.7

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் அருகே மேல நம்பிபுரம் கிராமத்தைச் சேர்ந்த தாய், மகள் ஆகிய இருவரையும் கடந்த 2025 மார்ச் 3ம் தேதி அவர்களது வீட்டில் வைத்து மர்ம நபர்கள் கொலை செய்துவிட்டு அவர்களிடமிருந்து தங்க நகைகள்மற்றும்பணத்தை கொள்ளையடித்துச் சென்றனர்.

இதையடுத்து தூத்துக்குடி காவல்துறை சார்பில் 10 தனிப்படை அமைக்கப்பட்டு, போலீசார் குற்றவாளிகளை தொழில்நுட்ப மற்றும் தடய அறிவியல் நிபுணர்கள் உதவியோடு தீவிரமாக தேடினர்.

மேலும் இதில் அருகிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட போலீசார், மோப்ப நாய் படைப்பிரிவு மற்றும் 6 ட்ரோன் கேமராக்கள் உதவியோடு 2 நாட்கள் இரவும், பகலுமாக குற்றவாளிகளை தீவிரமாக தேடினர்.

இதையடுத்து 2025 மார்ச் 6ம் தேதி அதிகாலையில் மேலநம்பிபுரம் கிராமத்தை ஒட்டியுள்ள காட்டுப்பகுதியில் பதுங்கியிருந்து வெளியே வந்த குற்றவாளிகளை போலீசார் கைது செய்தனர். மேலும் அவர்களிடமிருந்து 9 3/4 பவுன் தங்க நகைகள் மற்றும் ரூ.35 ஆயிரம் பணத்தை மீட்டனர்.

இந் நிலையில் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின்பேரில், எட்டயபுரம் பகுதியில் தாய், மகள் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான எட்டயபுரம், மேலநம்பிபுரம் பகுதியைச் சேர்ந்தவர்களான எட்டுராஜ் மகன் முனீஸ்வரன் (வயது 24), அம்மாசி மகன்மகேஷ்கண்ணன்(எ) கண்ணன் (வயது 28) மற்றும் எட்டயபுரம், தாப்பாத்தி பகுதியை சேர்ந்த பரமசிவம் மகன் வேல்முருகன் (வயது 22) ஆகிய 3 பேரையும் நேற்று (04.04.2025) எட்டயபுரம் போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## கோவிலுக்கு சென்றபோது விபத்து.... கார் பள்ளத்தில் கவிழ்ந்து தாய்மகன் பலி

மதுரை, ஏப்.7

சேலம் சூரமங்களத்தை சேர்ந்த சித்தன் மகன் ராஜ்குமார். இவர் மொபைல் சர்வீஸ் சென்டரில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி தமிழரசி, இவர்களுக்கு அஸ்வரதன் என்கிற 5 வயது மகன் இருந்தார்.

இந்த நிலையில் ராஜ்குமார் தனது உறவினர்களுடன் திருச்செந்தூர் கோவிலுக்கு சென்றார். கார் இன்று அதிகாலை மதுரைதூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் எட்டயபுரம் அருகே சென்றுகொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த கார் சாலை அருகே இருந்த பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் ராஜ்குமாரின் மனைவி தமிழரசி மற்றும் மகன் அஸ்வரதன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழனதனர். மேலும் காரில் இருந்தவர்கள் படுகாயமடைந்தனர். இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். அங்கு விபத்தில் சிக்கி உயிரிழந்த தாய் மற்றும் மகனின் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்

## கிரானைட் கற்களை ஏற்றிவந்த லாரி, சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து

உளுந்தூர்பேட்டை புறவழிச் சாலையில் கிரானைட் கற்களை ஏற்றிவந்த லாரி, சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்து நிகழ்ந்துள்ளதாக போலீசார் தகவல். ஓட்டுநர் மணிகண்டன் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.




## ஆன்லைன் வர்த்தகத்திற்கு எதிராக வணிகர் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படும்: விக்கிரமராஜா பேச்சு



சென்னை, ஏப்.7

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் மே 5 வணிகர் தினத்தில், 42வது வணிகர் அதிகார பிரகடன மாநாடு மதுராந்தகத்தில் நடக்கிறது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்கிறார். மாநாடு இடம் கால்கோள் விழா மற்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் கொடியேற்று விழா நேற்று நடந்தது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா தலைமை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளர்களாக தொழிலதிபர்கள் ஜெய்னுலாப்தீன், உமாபதி, செல்வராஜ், வேலாயுதம், பத்ரிநாத் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றினர். மாநில தலைமைச் செயலாளர் ராஜ்குமார், காஞ்சிபுரம் மண்டல தலைவர் அமல்ராஜ், மாநில கூடுதல் செயலாளர்கள் மணி, ராஜசேகரன், செய்தி தொடர்பாளர் பாண்டியராஜன், செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் பிரபாகரன், வடக்கு மாவட்ட தலைவர் இந்திரஜித், மாநில துணைத்தலைவர் அப்துல் சமத், மாநிலத் துணைத் தலைவர்கள் பிரபாகரன், ராஜசேகர் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச் செயலாளர் கோவிந்தராஜ் வரவேற்றார்.

தொடர்ந்து, தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைக்கப்பட்ட 100 அடி கொடி கம்பத்தில் சங்க கொடியைவிக்கிரமராஜா ஏற்றி, மாநாடு பந்தல் அமைப்பதற்கு கால்கோள் ஊன்றினார். அவர் பேசியதாவது: வரும் மே 5ம் தேதி மதுராந்தகத்தில் 42வது வணிகர் தினம், வணிகர் அதிகார பிரகடன மாநாடாக நடைபெற உள்ளது.

முதல்வர் இதற்கு முன்பு நடந்த மாநில மாநாட்டில் கலந்து கொண்டு வணிகர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றினார். வியாபாரிகளை அச்சுறுத்தும் ஆன்லைன் வர்த்தகம் மற்றும் கார்ப்பரேட் கம்பெனி நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ளது. தமிழக முதல்வரும், பாரத பிரதமரும் கட்டாயமாக வணிகர்களை பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## சிறுபான்மையினர் பள்ளி உள்பட அனைத்து கல்வி நிறுவனத்துக்கும் டிஇடி தகுதி தேர்வு பொருந்தும்: ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, ஏப்.7

டிஇடி தகுதி தேர்வு, சிறுபான்மை நிறுவனங்கள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது. மதுரை மாவட்டம், மேலூர் அருகே ஒரு சிறுபான்மையினர் அரசு உதவி பெறும் பள்ளியில், பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கு டிஇடி எனப்படும் ஆசிரியர் தகுதி தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்ற முதன்மை கல்வி அலுவலர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை ரத்து செய்து தனக்கு பட்டதாரி ஆசிரியர் பணி வழங்க வேண்டும் எனக் கோரி பஷீர் என்பவர் ஐகோர்ட் மதுரைகிளையில் மனு செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் நிஷாபானு, ஸ்ரீமதி அமர்வு, சிறுபான்மை நிறுவனங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதியை நிர்ணயிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது. இதற்கான கல்வித்தகுதிகளை என்சிடிஇ நிர்ணயம் செய்துள்ளது.

இதில் ஆசிரியர் தகுதித்தேர்வை கட்டாயம் என என்சிடிஇ கூறியுள்ளது. டிஇடி தகுதி தேர்வானது, சிறுபான்மை பள்ளிகள் உட்பட அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் பொருந்தும். இந்த வழக்கில் மனுதாரருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி இல்லாததால், பணி நியமனத்திற்கான ஒப்புதலை வழங்க முடியாது என அனுமதி மறுத்து கல்வித்துறை உத்தரவு பிறப்பித்துள்ளது. எனவே, தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. இவ்வாறு உத்தரவிட்டனர்.

## நீட் ஒழிப்பு போராட்டம் தேர்தலுக்காக போடும் நாடகம் சீமான்



திருவண்ணாமலை, ஏப்.7

திருவண்ணாமலை மாவட்டம் பிரம்மதேசம் பகுதியில் கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 21ந்தேதி நடந்த கூட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு பேசும்போது, மத, இன, மொழி, சாதி, சமய உணர்ச்சிகளை தூண்டும் வகையில் பேசியதாக கூறப்படுகிறது.

இதுகுறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். மேலும் இதுதொடர்பான வழக்கு விசாரணை செய்யாறு கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கு விசாரணைக்காக கடந்த பிப்ரவரி மாதம் செய்யாறு குற்றவியல் நீதித்துறை நடுவர் கோர்ட்டில் சீமான் ஆஜரானார். அதைத் தொடர்ந்து நேற்று 2வது முறையாக சீமான் கோர்ட்டில் ஆஜரானார். அதைத்தொடர்ந்து வழக்கு விசாரணையை வருகிற 28ந்தேதிக்கு நீதிபதி பாக்கியராஜ் ஒத்திவைத்தார்.

இதனையடுத்து கோர்ட்டில் இருந்து வெளியே வந்த சீமான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நீட் தேர்வு தொடர்பான அனைத்துக்கட்சி கூட்டம் என்பது நேர விரயம்தான். நீட் தேர்வு தி.மு.க. கூட்டணியில் இருந்தபோது காங்கிரஸ் கட்சி ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. நீட் ஒழிப்பு போராட்டம் தேர்தலுக்காக போடும் நாடகம் தான்.

கள் என்பது மது அல்ல, அது ஒரு உணவு. கள் மது போதை என தடைபோடும் அரசு, டாஸ்மாக் கடையில் விற்கப்படும் பிராந்தி, விஸ்கி என்ன புனித தீர்த்தமா? அல்லது மூலிகை பானமா? கள் இறக்க அனுமதி அளித்தால் டாஸ்மாக் வியாபாரம் பாதிக்கும் என்பதால்தான் மறுக்கப்படுகிறது. எந்த மாநில முதல்வர்களும்சாராயதொழிற்சாலை வைத்திருக்கவில்லை. ஆனால் இங்கு சாராய தொழிற்சாலை வைத்துள்ளனர்.

டாஸ்மாக் கடையில் காலி மதுபாட்டில் கொடுத்தால் ரூ.10, சாராயம் குடித்து இறந்தால் ரூ.10 லட்சம் கொடுக்கிறார்கள். ஒருபுறம் உங்களின் அப்பா பேசுகிறேன், போதையின் பாதையில் செல்லாதீர்கள் என்கிறார். அதே வேளையில் டாஸ்மாக் வியாபாரம் குறைந்த மாவட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஆய்வு என செய்தியும் வருகிறது.

வக்பு வாரிய சட்டம் குறித்து விஜய் தெரிந்து கொள்ளவில்லை என்பதை விட அக்கட்சியின் சார்பில் போராட்டம் நடத்திய உணர்வை வரவேற்கிறேன். எல்லோருக்கும் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்பதல்ல, ஆட்சியாளர்களுக்கே எல்லாம் தெரியவில்லையே.

இவ்வாறு அவர் கூறினார்.

## 1 முதல் 12ம் வகுப்பு வரையிலான தமிழ் பாடப்பகுதிகள் குறைப்பு பள்ளிக் கல்வித்துறை நடவடிக்கை

சென்னை ஏப்.7

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை 2017ம் ஆண்டில் வடிவமைக்கப்பட்ட தமிழ் பாடப்புத்தகங்கள்தான் தற்போது வரையில் நடைமுறையில் இருக்கின்றன. இந்த நிலையில் தமிழ் புத்தகங்களில் பாடப்பகுதிகள் அதிகமாக இருப்பதாகவும், இதனால் மாணவமாணவிகள் படிப்பதில் சிரமத்தை சந்திப்பதாகவும் பல்வேறு தரப்பினரிடம் இருந்து கோரிக்கைகள் கல்வித்துறை வசம் வந்து சேர்ந்தன. இதனையடுத்து அந்த பாடப்பகுதிகளை குறைக்க பள்ளிக் கல்வித்துறை முடிவு செய்து, அதற்கான பணிகளை தொடங்கியது.

குறிப்பாக 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான தமிழ் பாடப்புத்தகங்களில் உள்ள நீண்ட பாடப் பகுதிகளை குறைக்கவும், பொருத்தமற்ற பாடப்பகுதிகளை நீக்கி சீரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் அடிப்படையில் அதற்கான வல்லுனர்கள், பாடநூல் உருவாக்க குழுவினர் ஆலோசனை மேற்கொண்டு 1, 2ம் வகுப்பு பாடநூல்களில் உரிய திருத்தங்கள் மட்டும் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 3, 4 மற்றும் 5ம் வகுப்பு பாடநூல்களில் அதிக பக்கங்கள் கொண்ட பாடப்பகுதிகளை குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதேபோல், 6, 7 மற்றும் 8ம் வகுப்பு பாடநூல்களில் உள்ள 9 இயல்களை 8 ஆகவும், 9, 10ம் வகுப்பு பாடநூல்களில் 9 இயல்களை 7 ஆகவும், 11 மற்றும் 12ம் வகுப்பு பாடநூல்களில் உள்ள 8 இயல்களை 6 ஆகவும் குறைத்து இருக்கின்றனர்.

அவ்வாறு சீரமைக்கப்பட்ட 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான பாடப்புத்தகங்கள் அச்சிடுவதற்கான பணிகள் தற்போது தொடங்கி விறுவிறுப்பாக நடந்து வருவதாகவும், 202526ம் கல்வியாண்டு முதல் இந்த பாடப் புத்தகங்கள் நடைமுறைக்கு வர உள்ளதாகவும் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திருத்தணி காய்கறி மார்க்கெட்டுக்கு மீண்டும் காமராஜர் பெயரை சூட்ட வேண்டும்: ஜி.கே.வாசன் கோரிக்கை



சென்னை, ஏப்.7

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, மா.பொ.சி சாலையில் ஐம்பது ஆண்டு காலமாக காமராஜர் பெயரில் இயங்கி வந்த காய்கறி மார்கெட்புதுப்பிக்கப்பட்டு தற்பொழுது திறக்கும் தருவாயில் பெருந்தலைவர் பெயரில்லாமல் திறக்கவுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் இயங்கிவந்த காமராஜர் மார்க்கெட் சேதம் அடைந்த நிலையில் தற்பொழுது திருத்தணி நகராட்சியின் சார்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு காமராஜர் பெயருக்குப் பதில் வேறு பெயர் மாற்றம் செய்ய இருப்பதாக அறிந்து கடந்த மாதம் 3ந்தேதி அன்று தமிழ் மாநில காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்தது. மேலும் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் எதிர்ப்பு தெரிவித்தன.

தற்பொழுது திருத்தணி மாநகராட்சியின் சார்பில் வருகிற 09.04.2025 அன்று ம.பொ.சி சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள நாளங்காடியை பெருந்தலைவர் பெயரிடப்படாமல் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரால் திறக்கப்படவுள்ளதாக செய்தி வந்துள்ளது. இது நாட்டிற்காக தன் வாழ்நாளையே அர்ப்பணித்த பெருந்தலைவர் காமராஜரின் பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்துவதாக அமைகிறது. இது மிகவும் வருந்தத்தக்கது. பெருந்தலைவர் காமராஜர் பெயரையே மீண்டும் சூட்டவேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர் தகுதித்தேர்வு தேர்ச்சி என்ற நிபந்தனை சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் பொருந்தும்: மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை, ஏப்.7

மதுரையைச் சேர்ந்த பஷீர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், மதுரை மாவட்டம் மேலூர் அருகே உள்ள சிறுபான்மையினர் அரசு உதவி பெறும் பள்ளி ஒன்றில், பட்டதாரி ஆசிரியர் பணியிடத்திற்கு விண்ணப்பித்து இருந்தேன். ஆனால் இந்த பணியிடத்திற்கு ஆசிரியர் தகுதித்தேர்வு தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பது கட்டாயம் என மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உத்தரவு பிறப்பித்து உள்ளார். இந்த உத்தரவை ரத்து செய்து எனக்கு ஆசிரியர் பணி வழங்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரணை செய்த தனி நீதிபதி, மேற்கண்ட ஆசிரியர் பணியிட நியமனத்துக்கு ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெற்று இருப்பது அவசியம் என்று மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்தும், மனுதாரருக்கு ஆசிரியர் பணி வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டு இருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து, கல்வித்துறை சார்பில் மதுரை ஐகோர்ட்டில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நீதிபதிகள் நிஷா பானு, ஸ்ரீமதி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. விசாரணை முடிவில் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் தெரிவித்ததாவது:

சிறுபான்மை கல்வி நிறுவனங்களில் நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதியை நிர்ணயிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது. அந்த வகையில் பள்ளி ஆசிரியர் பணியிடங்களில் நியமிக்கப்படுபவர்களுக்கு தகுதியாக ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம் என தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் நிர்ணயித்து உள்ளது.

எனவே ஆசிரியர்களுக்கான இந்த கல்வித்தகுதி சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் உட்பட அனைத்து பள்ளிகளுக்கும் பொருந்தும். அதன்படி இந்த வழக்கை பொறுத்தவரை ஆசிரியர் தகுதித்தேர்வில் தேர்ச்சி பெறாததால் மனுதாரரின் கோரிக்கையை ஏற்க இயலாது. மனுதாரருக்கு ஆசிரியர்பணிவழங்க மறுத்த உத்தரவு செல்லுபடியாகும். இந்த விவகாரத்தில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளனர்.

## ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு வருவது எப்போது? நிர்மலா சீதாராமன் விளக்கம்

சென்னை, ஏப்.7

சென்னையை அடுத்த காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவன வளாகத்தில் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' குறித்த நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில், மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் பேசியதாவது:

ஒரே நாடு ஒரே தேர்தல் நாளையே தொடங்கப்போது இல்லை. 2029ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகுதான் ஜனாதிபதி ஒரே நாடு ஒரே தேர்தல் செயல்முறையை தொடங்குவார். இது ஒரு பெரிய முயற்சி. தேர்தல் ஆணையத்துக்கும் இந்த சட்டத்திருத்தத்தால் அதிகாரம் கிடைக்கும். 2029ல் ஜனாதிபதி மூலம் இது தொடங்கப்பட்டால், எல்லா மாநில சட்டமன்றத்தின் காலக்கட்டங்களையும் ஒரே நேர்கோட்டில் கொண்டு வருவதற்கான முயற்சி அப்போது இருந்து தொடங்கும். அதாவது, 2034ம் ஆண்டு நடக்கும் நாடாளுமன்ற தேர்தலோடு முடிவடையும். எனவே 2034க்கு முன்னதாக ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு வராது.

இது ஏதோ நாளைக்கே நடைமுறைக்கு வருவதுபோல, தவறான உண்மைக்கு புறம்பான செய்திகளை பரப்புகிறவர்களுக்கு இதை எடுத்து சொல்ல வேண்டும். இது போன்ற பெரிய விஷயத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்கமாட்டோம். அதிகம் சிந்தித்து, நிபுணர்களை கலந்தாலோசித்த பிறகுதான் இதை நடைமுறைப்படுத்த இருக்கிறோம்"இவ்வாறு அவர் பேசினார்.

தின கனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

7.4.2025

# திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் , மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோ பிறந்தநாள் விழா: மாபெரும் மாட்டுவண்டி எல்கைப்பந்தயம்

அவைத்தலைவர் ஆடிட்டர் அர்ஜூணராஜ், புதூர்மு.பூமிநாதன் எம்.எல்.ஏ, கழக பொருளாளர் செந்திலதிபன் , துணை பொதுச்செயலாளர் தி.மு. இராஜேந்திரன், மாநில இலக்கிய அணி செயலாளர் காரை செல்வராஜ், ப பங்கேற்கிறார்கள். சிவகங்கை மாவட்ட மதிமுக சார்பில் இளம் தலைவர் துரை வைகோ அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு காரைக்குடியில் மாபெரும் மாட்டுவண்டி எல்கைப்பந்தயம் மாவட்ட மதிமுக செயலாளரும் நகர்மன்ற மேனாள்உறுப்பினருமான பசும்பொன் மனோகரன் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும்



நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு தென்னவன் அவர்கள் பெரிய மாடு துவங்கி வைக்கிறார். காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ் மாங்குடி சிறிய மாட்டு வண்டி பந்தயத்தை துவங்கிவைக்கிறார். மதிமுக தலைமை கழக நிர்வாகிகள் வெற்றிக் கோப்பை மற்றும் பரிசுகளை வழங்கினார். சிவகங்கை மாவட்ட மதிமுக சார்பில் நடைபெறும் மாபெரும் மாட்டு வண்டி பந்தயத்துல் மாநில மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் மாமனிதர் வைகோவின் கண்மணிகள் கலந்து கொள்கின்றனர்

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பிறந்தநாள் விழா: காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக மற்றும் மதுரை ஸெவன் ஹில்ஸ் அரிமா சங்கம் இணைந்து நடத்தும் மாபெரும் கண்சிகிச்சை முகாம்

மாண்புமிகு கூட்டுறவுத்துறைஅமைச்சர்கேஆர். பெரியகருப்ன் அவர்களின் ஆலோசனையின் பேரில் சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கிழக்கு ஒன்றியக்கழக திமுக மாணவரணி அமைப்பாளர் வழக்கறிஞர் சதீஷ்வரன் ஏற்பாட்டில் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக, மதுரை ஸெவன் ஹில்ஸ் அரிமா சங்கம் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைமாவட்ட பார்வை இழப்புதடுப்புச் சங்கம் இணைந்து நடத்திடும் மாபெரும் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது...



கண்சிகிச்சை முகாமினை காளையார்கோவில் மேனாள் சேர்மன் , கிழக்கு ஒன்றியக்கழக திமுக செயலாளர் வே. ஆரோக்கியசாமி தலைமையேற்று தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மேனாள் மாவட்ட ஆளுநர் கள்ளந்திரி முத்துராமலிங்கம், அமைச்சரவை செயலாளர் ஜான்பிரிட்டோ, வட்டாரத்தலைவர் பொறியாளர் சரவணசங்கர், ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

சுமார் பத்திற்கும் மேற்பட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகளைபெற்று பயனடைந்தனர்...

இந்த நிகழ்ச்சியில் ஒன்றியமாணவரணிஅமைப்பாளர்பொறியாளர்சதீஷ்வரன், காஞ்சிப்பட்டி செல்வராஜ், தென்றல் நகர் சுரேஷ், உள்ளிட்ட அரிமா சங்க நிர்வாகிகள் , பொதுமக்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்..

நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஒன்றியக்கழக செயலாளர்வே. ஆரோக்கியசாமி தலைமையில் மாணவரணி அமைப்பாளர் பொறியாளர் சதீஷ்வரன் சிறப்பாக செய்திருந்தார்...

# சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தீப்பிடித்தோ ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஓவிய கண்காட்சி





தேவகோட்டை தே பிரித்தோ ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஓவிய கண்காட்சி நடைபெற்றது சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தே பிரித்தோ ஆண்களை மேல்நிலைப் பள்ளியில் 2024 2025ஆம் ஆண்டிற்கான ஓவிய கண்காட்சி நடைபெற்றது இதை பள்ளியின் அதிபர் அருட் தந்தை பாபு வின்சென்ட் ராஜா ஆசியுடன் வழங்கி கண்காட்சி தொடங்கி வைத்து பார்வையிட்டார்

பள்ளியின் தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர் அருள் தந்தை சேவைராஜ் முன்னிலை வைத்தார் மாணவர்களால் வரையப்பட்ட 175 கரி கோர்ட் ஓவியம் பென்சில் ஓவியம் லயன் ஓவியம் கருத்து ஓவியம் தலைவர்களின் உருவ ஓவியம் ஆகிய இடம் பெற்றன இந்த கண்காட்சியை உதவி தலைமை தந்தை ட்விட்டர் டிசோ ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு ஆர்வத்துடன் பார்வையிட்ட உதவி தலைமை ஆசிரியர்கள் அலெக்ஸ் ஓவிய ஆசிரியர் பூண்டி ஜெயராஜ் நிகழ்ச்சி ஒருங்கிணைந்தார்

# தென்காசி: பள்ளியில் மயங்கி விழுந்து 9ம் வகுப்பு மாணவி உயிரிழப்பு

தென்காசி, ஏப்.7

தென்காசி மாவட்டம் சுரண்டை அருகே இரட்டைகுளம் வடக்கு தெருவைச் சேர்ந்தவர் பிரகாஷ் (40 வயது). இவர் கேரளாவில் சலூன் கடை வைத்துள்ளார். இவருடைய மனைவி மீனா (35 வயது). இவர்களது மகள் மானஷா (14 வயது). சுரண்டை சிவகுருநாதபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தார். இவருக்கு உடல்நலம் சரியில்லாமல் அடிக்கடி மயக்கம் வருவதாகவும், அதற்காக சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.



இந்த நிலையில் நேற்று காலை மானஷா தனது வீட்டில் இருந்து சைக்கிளில் பள்ளிக்குச் சென்றார். அங்கு வகுப்பறையில் அமர்ந்திருந்தபோது திடீரென மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து ஆசிரியர்கள் சுரண்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி செய்யப்பட்டு மேல் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் செல்லும் வழியிலேயே மாணவி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து சுரண்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். பள்ளிக்குச் சென்ற மாணவி திடீரென மயங்கி விழுந்து இறந்தது சுரண்டை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வக்பு திருத்த மசோதா: எதிர்காலத்தில் மற்ற சமூகங்களை குறிவைப்பதற்கான ஒரு முன்னுதாரணம் செல்வப்பெருந்தகை

சென்னை ஏப்.7

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

வக்பு திருத்த மசோதா முஸ்லிம்களை ஓரங்கட்டுவதையும் அவர்களின் தனிப்பட்ட சட்டங்கள் மற்றும் சொத்துரிமைகளைப் பறிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு ஆயுதம் என்பது உறுதியாகியுள்ளது. ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. மற்றும் அவர்களது கூட்டாளிகளால் அரசியலமைப்பின் மீதான இந்தத் தாக்குதல் முஸ்லிம்களை இலக்காகக் கொண்டது, ஆனால் எதிர்காலத்தில் மற்ற சமூகங்களை குறிவைப்பதற்கான ஒரு முன்னுதாரணத்தை அமைக்கிறது.

இந்தச் சட்டம் இந்தியாவின் கருத்தையே தாக்குவதாலும், மத சுதந்திர உரிமையான 25வது பிரிவை மீறுவதாலும் காங்கிரஸ் கட்சி இந்த சட்டத்தை கடுமையாக எதிர்க்கிறது. இதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்ய திட்டமிடப்ப ட்டுள்ளது. இந்நிலையில் ஆர்.எஸ்.எஸ்.ன் அதிகாரபூர்வ இதழான ஆர்கனைசர், "இந்தியாவில் யாருக்கு அதிக நிலம் உள்ளது ? கத்தோலிக்க திருச்சபை vs வக்பு வாரியம் ஒரு விவாதம்" என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டுள்ளது. அதில் கத்தோலிக்க அமைப்புகளுக்கு 7 கோடி ஹெக்டேர்கள் நிலம் இருப்பதாகக் கூறியுள்ளது. அவை மிகப்பெரிய அரசு சாரா நில உரிமையாளராக இருப்பதாக விமர்சித்துள்ளது.

வக்பு சட்ட திருத்தத்தை செய்து முடித்த பின்னர் அடுத்து ஆர்.எஸ்.எஸ். இந்தியாவின் மற்றொரு சிறுபான்மையினரான கிறிஸ்தவர்களை இதன் மூலம் குறிவைத்துள்ளது.

1930களில், ஹிட்லர் தலைமையிலான நாஜி கட்சியினர், இதே பாணியில் முதலில் கம்யூனிஸ்டுகளையும், அடுத்ததாக தொழிற்சங்கவாதிகளையும், பின்னர் யூதர்களை யும் பிடித்து அழித்தனர். அதே பாணியில் பா.ஜ.க. தலைமையிலான சங் பரிவார் குழுவினர், முதலில் முஸ்லிம்களை குறி வைத்துள்ளன. அடுத்தது கிறிஸ்தவர்களை குறிவைக்க திட்டமிட்டுள்ளது தெளிவாகியுள்ளது. அன்று ஜெர்மனியில், அவர்களுக்காக குரல் கொடுக்க யாருமில்லை. ஆனால் இன்று சிறுபான்மையினர் மற்றும் விளிம்பு நிலை மக்களை, மோடி அரசின் பாசிச தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க, ராகுல் காந்தியும், மல்லிகார்ஜுன் கார்கே தலைமையிலான காங்கிரஸ் பேரியக்கமும் உள்ளனர்.

அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய இந்திய அரசியல் சாசனத்தை அழிக்க பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். முன்னெடுத்து வரும் இத்தகைய நாச வேலைகளை காங்கிரஸ் பேரியக்கம் முழு மூச்சாக எதிர்க்கும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# யோகி பாபுவின் "கஜானா" 3வது பாடல் வெளியானது




யோகி பாபு, வேதிகா, இனிகோ பிரபாகர் முதன்மை வேடங்களில்நடித்துள்ளபடம் 'கஜானா'.மேலும்இப்படத்தில் சாந்தினி, வேலு பிரபாகரன், மொட்டை ராஜேந்திரன் உட்பட பலர் நடித்துள்ளனர். போர் ஸ்கொயர் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தின் கதை, திரைக்கதையை எழுதி பிரபாதிஸ் சாம்ஸ் இயக்கியுள்ளார்.

இந்த படத்துக்கு விக்ரம் வர்மன் இசையமைத்துள்ளார். கோபிதுரைசாமி, வினோத் ஜே.பி ஒளிப்பதிவு செய்துள்ளனர். கே.எம்.ரியாஸ் படத்தொகுப்பு செய்துள்ளார். இந்த படத்தில் அழிந்துப்போன ஆதி உயிரினமான யாளி அனிமேஷன் செய்யப்பட்டுகொண்டுவரப்பட்டுள்ளது. 700ஆண்டுகளுக்கு முன்புதமிழ் பேரரசர் ஒருவரால் புதைக்கப்பட்ட பிரம்மாண்ட கஜானாவை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கும் இளைஞர்களின் சாகசப் பயத்தையும் அந்த கஜனாவை காப்பாற்றும் பேய்களின் அட்டகாசங்களையும், பொழுதுபோக்கு அம்சங்களுடன், திகில் மற்றும் காமெடியோடு இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படத்தின் டீசர் மற்றும் டிரெய்லர் வெளியாகி வைரலானது. யோகி பாபு, வேதிகா நடித்துள்ள 'கஜானா' படம் வரும் 18ம் தேதி வெளியாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் 'கஜானா' படத்தின் 3வது பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. கபிலன் வரிகளில் 'சுற்றும் உலகை' பாடலை வாசன் பாடியுள்ளார்.

# நாங்கள் இன்னும் ஒரு சரியான போட்டியை விளையாடியதாக நினைக்கவில்லை அக்சர் படேல்



ஐ.பி.எல். தொடரில் சென்னையில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் டெல்லி கேப்பிடல்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி 20 ஓவரில் 20 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 183 ரன்கள் எடுத்தது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக கே.எல். ராகுல் 77 ரன் எடுத்தார். சென்னை தரப்பில் கலீல் அகமது 2 விக்கெட் வீழ்த்தினார்.

தொடர்ந்து 184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சென்னை 20 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 158 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 25 ரன் வித்தியாசத்தில் டெல்லி வெற்றி பெற்றது. சென்னை தரப்பில் அதிகபட்சமாக விஜய் சங்கர் 69 ரன் எடுத்தார். டெல்லி தரப்பில் விப்ராஜ் நிஹாம் 2 விக்கெட் வீழ்த்தினார். இந்நிலையில், இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின்னர் டெல்லி கேப்டன் அக்சர் படேல் அளித்த பேட்டியில் கூறியதாவது, 3 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெறுவது எளிதாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அனைவரும் வெற்றியில் பங்காற்றினர். அணியின் சமநிலை நன்றாக இருக்கிறது. கேப்டனாக 3 போட்டிகளில் 3 வெற்றிகளைப் பெறுவது நல்ல உணர்வைக் கொடுக்கிறது.

ஒவ்வொரு போட்டிகளும் சில சிறப்பான கேட்ச்களும் இருக்கும். அதை தவற விடுவதும் இருக்கும். ஒரு கேப்டனாக அணி இதுவரை ஒரு கச்சிதமான போட்டியை விளையாடியது என்று நான் நினைக்கவில்லை. ஐ.பி.எல். மிகப்பெரிய தொடர். அதில் வேகம் எப்போது வேண்டுமானாலும் மாறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# இயக்குனர் ஹரியுடன் மீண்டும் இணையும் பிரசாந்த்



கோலிவுட்டில் டாப் நடிகர்களில் ஒருவராக இருந்தவர் பிரசாந்த். பின்னர் சில காரணங்களால் சினிமாவில் நடிக்காமல் இருந்தார். இவ்வாறு பல வருடமாக சினிமாவை விட்டு விலகி இருந்த நடிகர் பிரசாந்த், சமீபத்தில் கதாநாயகனாக நடித்து வெளியான படம் 'அந்தகன்'. பாலிவுட்டில் ஸ்ரீராம் ராகவன் இயக்கத்தில் வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட்டான 'அந்தாதுன்' படத்தின் ரீமேக்காக 'அந்தகன்' திரைப்படம் உருவானது. இப்படம் வெளியாகி வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் பெரிய வெற்றியை பெற்றது. விஜய்யின் கோட் படத்திலும் அவரது நடிப்பும் நடனமும் பேசப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பிரசாந்த் நடிக்கும் அடுத்தப் படத்தை இயக்குநர் ஹரி இயக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது பிரசாந்தின் 55வது படமாகும். இயக்குநர் ஹரியின் முதல் படமான 'தமிழ்' திரைப்படத்தில் பிரசாந்த் கதாநாயகனாக நடித்திருந்தார். கிட்டத்தட்ட 23 ஆண்டுகளுக்குப் பின் இந்தக் கூட்டணி மீண்டும் இணையவுள்ளது.

இந்தப் படத்திற்கான அறிவிப்பை பிரசாந்த் பிறந்தநாளான நாளை படக்குழு வெளியிட இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், இந்தப் படத்தில் கதாநாயகியாக கயாது லோஹர், பூஜா ஹெக்டே ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது.இந்த ஆண்டில் பிரசாந்த் இரு படங்கள் நடிக்கவுள்ளதாகக் கூறப்படும் நிலையில் அதற்கான அறிவிப்புகள் நாளை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தோனி எப்போது ஓய்வு பெறுவார்..? பயிற்சியாளர் அளித்த பதில்



ஐ.பி.எல். தொடரில் சென்னையில் நேற்று நடைபெற்ற 17வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ்டெல்லி கேப்பிடல்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 183 ரன்கள் மட்டுமே எடுத்தது. தொடர்ந்து 184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய சென்னை 20 ஓவரில் 158 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வி கண்டது.

சென்னைஅணியின்தோல்விக்குபேட்டிங் மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. இந்நிலையில், சென்னை அணியின் சீனியர் வீரரான தோனி நேற்றைய ஆட்டத்துடன் ஐ.பி.எல். தொடரில் இருந்து ஓய்வு பெற உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. நேற்றைய ஆட்டத்தை காண தோனியின் பெற்றோர் சென்னைக்கு வருகை தந்தனர்.

இதன் காரணமாக அவர் ஓய்வு பெற உள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. ஆனால், போட்டி முடிந்த பின்னர் இது தொடர்பாக எந்த ஒரு அறிவிப்பும் வெளியாகவில்லை. இந்நிலையில், தோனி எப்போது ஓய்வு பெறுவார் என்பது குறித்து முக்கிய தகவலை சி.எஸ்.கே பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் கூறியுள்ளார்.

நேற்றைய ஆட்டம் முடிந்த பின்னர் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, மகேந்திர சிங் தோனி ஓய்வு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் அவரோடு இணைந்து பணியாற்றுவதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். அவர் இன்னும் வலுவாக இருக்கிறார். அதனால் இப்போதெல்லாம் தோனியின் ஓய்வு குறித்த முடிவுகளை நான் கேட்பதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# தனது 29வது பிறந்தநாளை ராஷ்மிகா எங்கு கொண்டாடி இருக்கிறார் தெரியுமா? வைரலாகும் புகைப்படங்கள்



அனிமல், புஷ்பா மற்றும் தமிழில் விஜய்யுடன் வாரிசு திரைப்படங்களில் நடித்து நடிகை ராஷ்மிகா மந்தனா பிரபலமானார். சமீபத்தில் சிக்கந்தர் திரைப்பட வெளியீட்டு விழாவுக்கு துபாய் சென்றார். தொடர்ந்து பல்வேறு திரைப்படங்களில் நடித்து வரும் ராஷ்மிகா தனது 29வது பிறந்த நாளை நேற்று ஓமன் நாட்டின் அழகிய இயற்கை பகுதியான சலாலாவில் கொண்டாடினார்.

சலாலா மலை, கடல் என அனைத்து விதமான இயற்கை அம்சங்களும் நிறைந்த பகுதியாகும். இதில் சலாலாவின் கடற்கரை பகுதியை தேர்வு செய்து தனது பிறந்த நாளை கொண்டாடி உள்ளார்.

அமைதி மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் பகுதியில் தனது பிறந்த நாளைகொண்டாடவிரும்பியதாகஅவரதுநெருங்கியவட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர். கடற்கரை அருகே உள்ள சொகுசு விடுதியில் அவர் அமர்ந்து உணவருந்தும் புகைப்படங்கள் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தற்போது வைரலாகி வருகின்றன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.